DEPOSITION OF WITNESS
(Chapter Code of Civil Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF BODINAYAKANUR
**O.S.No. 6 /2024**

Deposition of Witness: PW1.

| | | | |
|---|---|---|---|
| Name | காளிமுத்து | Father Name – | முருகன் |
| Age | 46 | Village – | போடிநாயக்கனூர் |
| | | Taluk – | போடிநாயக்கனூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.06.2026.

**வாதி தரப்பு முதல் விசாரணை.**

நான் இவ்வழக்கில் வாதி. வாதி தரப்பு முதல் சாட்சியாக என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் படித்துப் பார்த்து கையெழுத்திட்டு தாக்கல் செய்துள்ளேன். 31.10.2000 ம் தேதியிட்ட பாகவிஸ்தி பத்திர எண்.3191/2000 ஆவணத்தின் அசல் **வா.சா.ஆ.1** ஆகும், 11.11.2010 ம்தேதியிட்ட என் தாயார் மணியின் இறப்பு சான்றிதழ் அசல் **வா.சா.ஆ.2** ஆகும், 09.10.2014 ம் தேதியிட்ட எனது தந்தை எனக்கு எழுதி வைத்த உயில் சாசனம் அசல் **வா.சா.ஆ.3** ஆகும், 15.06.2015 ம் தேதியிட்ட எனது தந்தை முருகன் அவர்களின் இறப்பு சான்றிதழ் **வா.சா.ஆ.4** ஆகும், 22.01.2019 ம் தேதியிட்ட எனது தந்தை முருகனின் வாரிசு சான்றிதழ் அசல் **வா.சா.ஆ.5** ஆகும், 23.06.2022 ம் தேதியிட்ட நான் எனது மனைவிக்கு எழுதி வைத்த தானசெட்டில்மெண்ட் ஆவண எண்.3908/2022 ன் அசல் **வா.சா.ஆ.6** ஆகும், 08.09.2023 ம் தேதியிட்ட பிழை திருத்தல் ஆவணம் எண்.5304/2023 ன் அசல் **வா.சா.ஆ.7** ஆகும், 19.09.2023 ம் தேதியிட்ட 1 ம் பிரதிவாதி மேற்படி சொத்தை பதிவு செய்ய முடியாது என்ற Refusal Check slip ன் அசல் **வா.சா.ஆ.8** ஆகும், 06.11.2023 ம்தேதியிட்ட எனது தந்தை பெயரில் உள்ள வீட்டு வரி ரசீதின் அசல் **வா.சா.ஆ.9** ஆகும், 06.11.2023 ம் தேதியிட்ட எனது தந்தை பெயரில் உள்ள குடிநீர் கட்டண ரசீதின் அசல் **வா.சா.ஆ.10** ஆகும், 06.11.2023 ம் தேதியிட்ட அரசு வழிகாட்டி மதிப்பு சான்றிதழ் கணினி நகல் **வா.சா.ஆ.11** ஆகும்.

முதல் விசாரணை தொடர்ச்சி 12.06.2026 அன்று ஒத்தி வைக்கப்படுகிறது.

Take down by me in the open Court
and read over to the witness admited
by the witness to be correct.

MOHAMED HASHIM A
Digitally signed by MOHAMED HASHIM A
Date: 2026.06.04 17:25:18 +0530

District Munsif,
Bodinayakanur.